செ.வெ.எண்: 48 நாள்:18.06.2021

# கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி அரசு மருத்துவமனையில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப ., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

---

கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி அரசு மருத்துவமனையில் இன்று(18.06.2021) மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது வருவாய் கோட்டாட்சியர்(பொள்ளாச்சி)(பொ) திரு.மகாராஜ், இணை இயக்குநர் (மருத்துவம்) மரு.ராஜா, இருப்பிட மருத்துவ அலுவலர் திரு.சரவணபிரகாஷ், கண்காணிப்பாளர்(பொ) திரு.சுரேஷ் தேவதயாள் ஜோசப், மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

கோயம்புத்தூர் மாவட்டத்தில், கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இ.எஸ்.ஐ மருத்துவக்கல்லூரி மருத்துவமனை, அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை, பொள்ளாச்சி அரசு மருத்துவமனை, மேட்டுப்பாளையம் அரசு மருத்துவமனை, உள்ளிட்ட அரசு மருத்துவமனைகளில் கொரோனா தொற்றுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில், பொள்ளாச்சி அரசு மருத்துவமனையில் கொரோனா தொற்று சிகிச்சைக்கு ஒதுக்கப்பட்ட 250 படுக்கைகளில், 171 நோயாளிகள் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்நிலையில் பொள்ளாச்சி அரசு மருத்துவமனையில் இன்று மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டதுடன், கொரோனா நோயாளிகளுக்கு ஏற்படுத்தப்பட்டுள்ள கூடுதல் படுக்கை வசதிகள், போதிய அளவில் ஆக்ஸிஜன் மற்றும் பிரத்யேக மருந்துகள் இருப்பு குறித்தும், கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டுவரும், சிகிச்சை முறைகள் மற்றும் உணவுகள் குறித்தும் மருத்துவர்களிடம் கேட்டறிந்தார்.

மேலும், சிகிச்சை பெற்று வரும் நோயாளிகளின் ஆக்சிஜன் தேவையினை பூர்த்தி செய்யும் விதமாக 500 லிட்டர் ஆக்சிஜன் உற்பத்தி நிலையம் அமைக்கும் பணி, உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பணிகள் நடைபெற்று வருவதை இன்று மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

தொடர்ந்து, அரசு மருத்துவமனையில் கொரோனா சிகிச்சை பிரிவு, அவசர சிகிச்சை பிரிவு, மகப்பேறு சிகிச்சை பிரிவு, புறநோயாளி சிகிச்சை பிரிவு, சித்த மருத்துவ சிகிச்சை பிரிவு, பச்சிளம் குழந்தைகள் பிரிவு, விபத்து அவசர சிகிச்சை பிரிவு, யோகா மற்றும் இயற்கை மருத்துவ பிரிவு ஆகிய பிரிவுகளையும், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

மேலும், ஊராட்சி பகுதிகளில் வீடு வீடாக சென்று பரிசோதனை மேற்கொள்ளவும், முகக்கவசம் அணியாதவர்கள், சமூக இடைவெளியினை பின்பற்றாதவர்கள், ஊரடங்கு காலத்தில் அனுமதிக்கப்பட்ட கடைகள் தவிர மற்ற கடைகள் திறந்திருப்பவர்கள் ஆகியோரிடம் அபராதம் வசூலிக்கவும் அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள் உத்தரவிட்டார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கோயம்புத்தூர்.**